பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினர் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்கள். தற்போது சார் ஆட்சியர், செய்யாறு அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைப்பார்கள். அதன் பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள்"

சார் ஆட்சியர், செய்யாறு அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார். மேலும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கும் போது தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் குறிப்பிட்டு கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திரு. எம். ஷேக் நவாஸ், ஒருங்கிணைப்பாளர், தி/ள். ஜியோ எக்ஸ்பொளரேசன் & மைனிங் சொல்யூசன்ஸ், சேலம் (தி/ள். SKT மைன்ஸ். சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் ஆலோசகர்) அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், சார் ஆட்சியர், செய்யாறு அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1. திரு. சிற்றரசன், காகனம் கிராமம்.**

இவர் கூறுகையில், இந்த குவாரியம் அடுத்து வர குவாரியும் இரண்டும் காகனம் கிராமத்தில் தான் இருக்கிறது. நான் கூறுகின்ற கருத்தும் இரண்டு

குவாரிகளுக்கும் பொதுவான கருத்துக்கள்தான். நான் இங்கு சொல்வது இந்த மனுவில் இருக்கிறது அப்படியே இதனை படிக்கிறேன். இந்த மனுவில் ஊர் மக்கள் அனைவரும் கையெழுத்து போட்டு இருக்கிறார்கள் அதில் சிலர் வரவில்லை. எங்கள் காகனம் கிராமத்தில் புதியதாக அமையவுள்ள இரண்டு கல் குவாரிகளுக்கு(SSS Mines & SKT Mines) சுற்றுச்சூழல் பாதுகாப்புத் துறையின் அனுமதி பெறுவதற்கான பொதுமக்களின் கருத்துகளைக் கேட்டும் கூட்டம் வெம்பாக்கம் 13.08.2025 எங்கள் எதிர்ப்பும் ஆட்சேபனையும் எங்கள் காகனம் கிராமத்திலும் அதன் எல்லைகளை ஒட்டியும் ஏற்கெனவே இயங்கி வரும் 3 4 குவாரிகள் எங்களுக்குப் பெரும் பாதிப்பையும், துன்பத்தையும் தந்து வருகின்றன.

அந்த குவாரிகளுக்கு அனுமதி வழங்கும் முன் நடத்தப்பட்ட கருத்து கேட்புக் கூட்டம் முறையான அறிவிப்பு இன்றியும் எங்கள் கிராம மக்களுக்குப் பதிலாக ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்களைக் கலந்து கொள்ள வைத்தும் அதில் கிராம மக்கள் ஒப்புதல் அளித்தனர் என்று தீர்மானம் போடப்பட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.

இந்த முறையற்ற செயலைக் கண்டித்தும் இங்கு நடைபெறும் குவாரிகளுக்கு வழங்கப்பட்ட உத்தரவில் கூறப்பட்ட மக்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான மேற்கொள்ளாததைக் கண்டித்தும் நாங்கள் பல புகார் மனுக்களை தங்களுக்கு நடவடிக்கைகள் எதையும் அனுப்பியுள்ளோம் கிராம மக்கள் ஒன்று இரண்டு 27.03.2024 அன்று சாலை மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டோம் அப்போது வட்டாட்சியர் நேரில் வந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதி அளித்தார் மேலும் எங்கள் பிரதிநிதிகள் தங்களை திருவண்ணாமலையில் தங்கள் அலுவலகத்திலேயே சந்தித்தும் கோரிக்கை மனு அளித்தனர்.

எங்கள் கிராமப் பஞ்சாயத்து சபைக் கூட்டங்களிலும் மூன்று முறை குவாரிகளை மூடக்கோரும் தீர்மானங்களை நிறைவேற்றி அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ளோம். ஆனால் இன்றுவரை எந்த

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை அந்தக் குவாரிகள் அனைத்தும் தொடர்ந்து இயங்கி வருகின்றன எங்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இது இவ்வாறு உள்ள நிலையில் இப்போது இன்னும் இரண்டு குவாரிகள் எங்கள் கிராமத்தில் வர உள்ளன என்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்தோம். மேலும் புதிய குவாரிகள் அமைந்தால் அவை எங்களுக்குப் பெரும் பாதிப்பை உருவாக்கும் எங்கள் குழந்தைகள் பாதிக்கப்படுவர். விளை நிலங்களும் நீர் நிலைகளும் மிகவும் அதிக அளவில் பாதிப்புக்கு உள்ளாகும் இதே நிலை தொடர்ந்தால் எங்கள் கிராம மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறி ஆகிவிடும்

புதிய குவாரிகளுக்கான வரைவு திட்ட அறிக்கைகளிலும உண்மைக்குப் புறம்பான தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன. சில உண்மைகள் மறைக்கப்பட்டும் உள்ளன. இதன் அடிப்படையில்தான் குவாரிகளுக்கான அனுமதி கோரப்பட்டுள்ளது.

எனவே புதிய குவாரிகள் அமைப்பதற்கான முயற்சியைக் கைவிட வேண்டும் எனவும் எந்த காரணத்தைக் கொண்டும் புதிய குவாரிகளுக்கு அனுமதி வழங்கள் கூடாது எனவும். இதன்மூலம் தங்களைக் கேட்டுக்கொள்கிறோம் சுற்றுச்சூழலை பாழ்படுத்தும் குவாரிகளை எங்கள் கிராமத்தில் அமைப்பதற்கு எங்களின் கடுமையான ஆட்சேபனையையும். எதிர்ப்பையும் இக்கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் கிராம மக்கள் இன்று வெம்பாக்கம் ஸ்ரீ கிருஷ்ணா மஹாலில் நடைபெற்ற கருத்து கேட்புக் கூட்டத்திலும் நேரில் கலந்து கொண்டு குவாரிகள் அமைவதற்கு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர் சுற்றுச்சூழல் அமைச்சகம் இதற்கு ஒப்புதல் அளிக்கக் கூடாது எனவும் நாங்கள் தெரிவித்துள்ளோம்.எங்கள் கருத்தையும் ஆட்சேபனையையும் மனதில் கொண்டு எந்த புது குவாரியையும் எங்கள் கிராமத்தில் துவக்கப்படுவதற்கான அனுமதியை அளிக்கக்கூடாது என்று தங்களை கேட்டுக்கொள்கிறோம்

இது மட்டுமின்றி ஏற்கனவே இயங்கிவரும் குவாரிகளையும், அவை அனைத்தும் விதிகளை மீறிச் செயல்பட்டு வருவதால், உடனடியாக நிறுத்த உத்தரவு அளிக்கவும் வேண்டுகிறோம். இந்த மனுவை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆட்சேபனை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**<u>2. திரு. வீரமணிதாசன், காகனம் கிராமம்.</u>**

இவர் கூறுகையில், இதற்கு முன் பேசியவர் இந்த கிராமத்தில் தான் இருக்கிறாரா? இல்லை வெளியே வசிக்கிறாரா என்று தெரியவில்லை. இந்த குவாரியினால் எவ்வளவு நன்மை நமக்கு நடந்து இருக்கிறது. அது உங்களுக்கே தெரியும் இதற்கு முன்பும் தெரியும் இனிமேலும் தெரியும். இருப்பதை விட்டுவிட்டு இனிமேல் வருவதை வேண்டுமானாலும் தடுக்கலாம். நீங்கள் அதாவது பொதுமக்கள் என்ன செய்து உள்ளீர்கள் என்று அவர்களுக்கு தெரியும். எஸ் கே டி மைன்ஸ் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து தருகிறார்கள். சாலை வசதி கால்வாய் அமைத்தல் மற்ற அனைத்து வசதிகளும் அவர்களது நிதியிலிருந்து தான் செயல்படுகிறது என்பது உங்களுக்கும் தெரியும் எனக்கும் தெரியும். எங்களுக்கு எஸ் கே டி மைன்ஸ் வருவதில் எந்த ஒரு ஆட்சேபனை ஒன்னும் இல்லை. வளர்ச்சி தான். என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**<u>3. திரு. ராம் கணேஷ், காகனம் கிராமம்.</u>**

இவர் கூறுகையில், முன்பு நடந்த கூட்டத்திற்கு தகவல் எதுவும் சொல்லவில்லை என்று சொன்னார்கள். இந்த கூட்டத்திற்கும் மூன்று நாட்கள் முன்பாகத்தான் அரசின் சார்பாக தகவல்கள் தெரிவிக்கப்பட்டது. 15.07.2025 தேதியில் மாசு கட்டுப்பாடு வாரியத்தில் இருந்து சொன்னதாக அறிக்கையில் சொன்னார்கள். ஆனால் அதனை நாங்கள் மக்களிடம் அந்த தகவல்களை சேர்த்ததற்கு பின் தான் இவர்களே சொல்லிவிட்டார்கள் நாம் சொல்லுவோம் என்று மூன்று நாட்களுக்கு முன்பாக நீங்கள் தகவல்களை சொன்னீர்கள். இப்பொழுது இரண்டு குவாரிகளின் சுற்றுச்சூழல் தாக்கமதிப்பீட்டு அறிக்கையில்

உள்ளதை சொல்கிறேன். இதை நான் எதுவும் செய்யவில்லை. யார் வேண்டுமானாலும் வலைத்தளம் மூலம் இந்த சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீட்டு அறிக்கையை எடுத்துக் கொள்ளலாம். மொத்தம் அந்த அறிக்கை 250 பக்கங்கள் கொண்ட ஆவணத்தினை நான் நான்கு பக்கத்தில் எழுதி வந்திருக்கிறேன். அதனை இப்பொழுது படிக்கிறேன். சுரங்க ஆழம் 72 மீட்டர் என்று இருக்கிறது. போன முறை 54 மீட்டர் என்று சொன்னார்கள். ஏனென்றால் தண்ணீர் வருவது 60 மீட்டர் ஆக இருந்தது. இதில் 72 என்றால் தண்ணீர் ஆழம் 78 ஆக இருக்க வேண்டும். இதில் அறிவியல் என்னவென்றால் படித்த இளைஞர்கள் இதற்கு படிக்க கூட தேவையில்லை அனைவருக்கும் புரியும். இப்பொழுது பள்ளமாக இருக்கும்பொழுது மேலிருக்கும் தண்ணீர் கீழே வரும். திட்ட அறிக்கை தயாரிக்கும் பொழுது எடுப்பதை விட தண்ணீரின் ஆழம் 78 மீட்டராக இருக்கும். ஆனால் இவர்கள் 240 அடியில் தான் காகன கிராமத்தில் நீர்மட்டமே இருக்கிறது என்று எழுதி இருக்கிறார்கள். இது 240 அடியில் தண்ணீர் கிடைப்பது என்றால் இதே அரசாங்கம் பொது மக்களுக்கு 20 மீட்டர் அடியில் கிணறு வெட்டி தண்ணீர் வழங்கி வருகிறார்கள். 20 மீட்டர் அடியில் தண்ணீர் வழங்க முடியும் என்றால் குவாரிக்கும் கிணற்றுக்கும் 100 மீட்டர் தான் தூரம். அப்பொழுது கிணறு வெட்டுவதற்கு காண்ட்ராக்ட் எடுத்து டெண்டர் விட்டதெல்லாம் தவறா? இல்லை இங்கு நடப்பது தவறா? அதனை அரசாங்கம் தான் சரியாக சொல்ல வேண்டும். இந்தப் பக்கம் 20 அடியில் தண்ணீர் கிடைக்கிறது என்று அரசாங்கம் அதாவது PWD சொல்கிறது. அதே அரசாங்கம் மாசு கட்டுப்பாடு வாரியத்தால் 78 அடியில் தான் தண்ணீர் கிடைக்கிறது என்று இங்கு சொல்கிறது. இரண்டு அதிகாரிகளும் பேசி சரியான பதிலை சொல்லுங்கள். அடுத்ததாக நீர் நிலைகள், இந்த அறிக்கையில் ஏரி குளம் மட்டும்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்ற காகனம் ஏரியோ காகணம் தாங்கலோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. அடுத்தது திட்ட செலவு 3.93 கோடி. இந்த சுற்றுச்சூழல் எதுவும் பாதிக்காமல் இருப்பதற்கு இவர்கள் கொடுக்கும் பணம். இதிலிருந்து எதையும் செலவு செய்ய மாட்டார்கள். நம்ம நடந்த குவாரியில் நாங்கள் போராட்டம் செய்ததால் சிஜஆர் என்ற நிதிமூலம் 5 லட்சம் ஒதுக்கினார்கள். அதுவும் பள்ளியில் வேலை செய்பவர்கள் பெண்

ஆசிரியர்கள். ஆனால் இவர்கள் பள்ளியில் இவ்வளவு மாணவர்கள் படிக்கிறார்கள் என்று ஆண் ஆசிரியர் பெயர் போட்டு அந்த காசினை பள்ளி நிர்வாகத்தின் வங்கிக் கணக்கில் போடுகிறார்கள். தப்பு செய்பவர்கள் அதனையும் சரியாக செய்ய தெரியவில்லை. இவர்கள் 24 மணி நேரத்திற்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை தண்ணீர் தெளிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்து இரண்டு நாட்கள் தான் தெளிப்பார்கள் ஒரு நாளைக்கு இல்லை ஒரு வருடத்திற்கு இரண்டு நாட்கள் தான் தண்ணீர் தெளிப்பார்கள். அதுவும் கிராம சபை நடக்கின்ற நாளன்று தான் தெளிப்பார்கள். அன்றைக்கு யாரும் வெளியே வர மாட்டார்கள் குவாரியும் இயங்காது. விடுமுறை என்பதால் அனைவரும் வீட்டில் தான் இருப்பார்கள். ஏன் தெளிக்கிறார்கள் என்றால் அன்று தூசி படிவதற்காக இல்லை வட்டாட்சியர் யாராவது செல்வார்கள் அல்லது மாவட்ட ஆட்சியர் ஆய்வுக்கு வருவார் என்று தான் தெளிப்பார்கள். அடுத்தது பசுமை அரண், ஒரு ஹெக்டருக்கு 500 மரங்கள் வைப்பார்களாம். அப்பொழுது ஐந்து ஹெக்டருக்கு குவாரி கேட்கிறார்கள் 2400 மரங்கள் வைத்திருக்க வேண்டும். ஏழு ஆண்டுகளில் 15 ஹெக்டர்கள் குவாரி செய்து விட்டார்கள். அப்பொழுது அவ்வளவு மரங்கள் வைத்திருக்க வேண்டும். மரங்கள் வைப்பதற்கு இடம் இல்லாத அளவு வைத்திருக்க வேண்டும். ஒரு மரம் கூட நடப்படவில்லை. மாறாக குவாரி செய்யும் இடத்தில் இருந்த மரங்கள் அனைத்தும் வெட்டப்பட்டன. தனியார் இடத்திலிருந்து மரங்கள் செடிகள் கொடிகள் அனைத்திலும் குவாரியின் தூசிகள் பட்டு இருக்கின்ற மரங்கள் தான் இல்லாமல் போகின்றன. புதியதாக இவர்கள் எந்த மரத்தையும் வைக்கவில்லை. அடுத்து 850 மீட்டர் வரை எந்த குடியிருப்புகளும் இல்லை. இவர்கள் கூகுள் எர்த் அதிலிருந்து புகைப்படத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள் அதில் 500 மீட்டர் ஆழத்தில் இரண்டு வருடத்திற்கு முன்பே ஆறு வீடுகள் இருக்கின்றன. ஆனால் இவர்கள் 850 மீட்டரில் வீடுகள் இல்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் அறிக்கையில் தான் இருக்கிறது நான் எதுவும் புதியதாக சொல்லவில்லை. அடுத்து குவாரியில் இருந்து கழிவுநீர் வெளியேற்றம் எதுவும் இல்லை. குவாரி அருகில் எனக்கு விவசாய நிலம் எதுவும் இல்லை எனக்கு அடுத்து பேச வருபவர்கள் விவசாய நிலங்கள் இருப்பவர்கள்

அதைப்பற்றி கூறுவார்கள். சிறந்த முறையில் நிறைந்த வழிமுறைகள் இதனை பற்றி நான் பேசவே விரும்பவில்லை இதைப்பற்றி பேச வேண்டும் என்றால் எனக்கு இரண்டு மணி நேரம் தேவை. அடுத்து தனிப்பட்ட நடவடிக்கைகள் நிலத்தின் நான்கு ஹெக்டருக்கு நீர்த்தேக்கம் அமைக்கப்படும். ஒரு குவாரி முடிந்துவிட்டால் அந்த குவாரியினை அப்படியே விட்டுவிடக்கூடாது. அதனை ஒரு நீர்த்தேக்கமாக மாற்ற வேண்டும். அப்படி பார்த்தால் இங்கு ஏற்கனவே ஸ்ரீதர் குவாரி முடிந்ததாக இவர்களே ஆவணத்தில் குறிப்பிட்டு உள்ளார்கள். அவர்கள் குவாரியில் நீர்த்தேக்கம் செய்தார்கள் என்றால் இல்லை. ஏனென்றால், அடுத்தடுத்து கதிர்வேலன் குவாரி எஸ்கேடி மைன்ஸ் என்று தொடர்ச்சியாக எடுக்கிறார்கள். நீங்கள் தொடர்ச்சியாக பள்ளம் எடுப்பது தவறு இல்லாத குழியில் எப்படி நீர் தேக்கம் செய்வீர்கள் என்று எனக்கு தெரியவில்லை. முறையான வேலிகள் அமைக்கப்படும். நீங்கள் வேண்டுமென்றால் அந்த வழியில் சென்று பாருங்கள் எவ்வளவு தூரம் அமைத்திருக்கிறார்கள் என்று தெரியும். அடுத்து வாகனங்கள் தார்ப்பாய் போட்டு மூடப்பட்டிருக்கும். எனக்கு வருபவர்கள் அதைப்பற்றி கூறுவார்கள் அதாவது ஒருவர் கூறினால் கூட போதும். வாகனங்கள் 20 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும். அதைப் பற்றி எல்லாம் நான் பேசவில்லை. நேரம் தான் வீணாகும். தொல்லியல் தளங்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஐநூறு வருடம் பழமையான சிவன் கோயில் ஒன்று உள்ளது. அதனை பற்றி ஒரு குறிப்பு இல்லை. பென்ச் முறையில் வெட்டுகிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் அண்ணா பல்கலைக்கழகத்தில் சிவில் இன்ஜினியரிங் படித்தேன். அதனால் இதனை கேட்கிறேன். மேலே பத்துக்கு பத்து என்று எடுக்கிறார்கள் கீழே அதுவே இரண்டுக்கு இரண்டு என்று எடுக்க அனுமதி வழங்கி உள்ளீர்கள். ஆனால் அவர்கள் கீழேயும் பத்துக்கு பத்து என்று எடுத்தால் வருவாய் எவ்வளவு பாதிக்கிறது அது மட்டுமல்லாமல் அங்கு எவ்வளவு சேதம் அடையும் என்று பாருங்கள். அறிக்கையில் ஒன்று சொல்கிறீர்கள் நீங்கள் செய்வது வேறு ஒன்றாக இருக்கிறது. அடுத்தது சாலை, அந்த குவாரிக்கு முன்னால் இருக்கும் சாலை ஏழு வருடமாக இன்னும் போடவில்லை. அதற்கு முன் தெரியவில்லை குவாரி வந்ததிலிருந்து இன்னும்

ஒரே ஒரு முறை கூட அந்த சாலை போடவில்லை. முழுவதும் மண் சாலையாக தான் இருக்கும் அது பராமரிப்பதும் மக்களுக்காக இல்லை அவர்கள் வண்டிகள் எதுவும் சேதம் அடையாமல் பணம் வீணாகாமல் இருப்பதற்காகத்தான். இந்த வெம்பாக்கம் ஒன்றியத்தில் புற்றீசல் போல் குவாரிகள் இயங்கி வருகின்றன. இதற்கு ஒரு முடிவு எப்பொழுது வரும் என்று தெரியவில்லை. நன்றி என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆட்சேபனை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**4. திரு. இளங்கோவன், காகனம் கிராமம்.**

இவர் கூறுகையில், இங்கு அனைவரும் குவாரி வேண்டாம் என்று சொல்கிறார்கள். ஆனால் இது எல்லாம் எஸ்சி நிலங்கள், சர்வே எண்களை பார்த்தால் தெரியும். இந்த ஊரில் எஸ்சி மக்கள் இருப்பதற்கு இடம் கிடையாது. இந்த நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து குவாரி செய்கிறார்கள். இந்த நிலங்களை எல்லாம் இந்த ஊரில் உள்ளவர்களுக்கு சமமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இது எல்லாமே எஸ்சி நிலங்கள் தான் பின்னாடி சர்வே எண்களை பாருங்கள். 70 ஏக்கர்கள் இருந்தது இப்பொழுது 15 ஏக்கர் மட்டுமே இருக்கிறது. அதிலும் மண்களை கொட்டுவது என்று அதிகாரம் செய்து வருகிறார்கள். அங்கு எத்தனை ஏக்கர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்று ஏ டி மைன்ஸ் மூலம் பார்க்க வேண்டும். சாலைகளில் கனரக வாகனங்கள் செல்லக்கூடாது. இவ்வளவு தான் வண்டிகளில் ஏற்றி செல்ல வேண்டும் என்று ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. ஆனால் இவர்கள் பெரிய வண்டிகளில் வருகிறார்கள். ஓட்டு கேட்க மட்டும் வருகிறார்கள். ஆட்சியாளர்களால் தான் இங்கு அநியாயம் அக்கிரமம் அனைத்தும் நடக்கிறது. வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் சர்வே எண் 30 சித்தேரி பாம்பன் ஏரி என்று பெயர். 87 ஏக்கர்கள் இருக்கிறது அதில் உயர் குடியினருக்கு 75 ஏக்கர்கள் இருக்கிறது. மீதம் 15 ஏக்கர் சேரிக்கு உள்ளது. வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் வன்மத்துடன் அந்த உயர் குடியினருக்கு மட்டும் சிமெண்ட் கால்வாய் என்று அனைத்து வசதிகளையும் செய்து தருகிறார்கள். எங்களுக்கு ஒரு கால்வாய் கூட கிடையாது. மைன்ஸ் தொகை

இரண்டு கோடி ரூபாய் இருக்கிறது. ஒரு கோடி ரூபாய் செலவு செய்தார்கள். அதில் ஒன்றுமே எங்களுக்கு செய்யவில்லை. இருக்கிற கிரஷர்களை மூட வேண்டும். வந்து ஆய்வு செய்யுங்கள். எங்களுக்கு இந்த குவாரி வேண்டாம். சேரி நிலங்களை எப்படி ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்பது எங்களுக்கு தெரியவில்லை என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆட்சேபனை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**<u>5. திரு. மதுசூதனன். காகனம் கிராமம்.</u>**

இவர் கூறுகையில், நாங்கள் இங்கு நிலம் வைத்து பயிர் செய்து கொண்டிருக்கிறோம் அதுதான் என் முதல் கருத்து. ஜெம் என்ற நிறுவனம் ஒரு அறிக்கை தயார் செய்து அதன் மூலம் தான் மைனிங் செய்கிறார்கள் என்று சொன்னார்கள் அது அனைத்தும் பொய். அதன் அடிப்படையில் தான் நான் இங்கு கருத்துக்களை கூற போகிறேன். அவர்கள் கூறியது அனைத்தும் பொய்யான கருத்துக்கள். அதனை தொடர்ந்து அவர்கள் செய்தார்கள் என்றால் நாங்கள் அந்த நிறுவனத்திற்கு எதிராக இருப்போம். நாங்கள் நான்கு வருடங்களாக நியாயமான முறையில் அமைதியாக தான் போராடி வந்தோம். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற காரணத்தினால் தான் இப்பொழுது இங்கு வந்து இருக்கிறோம். இதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அடுத்து என்ன செய்வது என்று தெரியவில்லை. ஆனால் அரசாங்கம் ஏதாவது செய்ய வேண்டும். மக்கள் சாலையில் நடக்க முடியவில்லை. இவர்கள் வண்டிகளை வேகமாக ஓட்டி பிள்ளைகளுக்கு விபத்து ஏற்படுகிறது. பள்ளிகளுக்கு செல்லும்போது இரண்டு மூன்று முறை விபத்து ஏற்பட்டு இருக்கிறது. அடுத்து இந்த அறிக்கையில் மாசு ஏற்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் இங்கு அதிகமாக மாசு இருக்கிறது. நேரில் வந்து ஆய்வு செய்யுங்கள். சென்ற முறை வட்டாட்சியர் வந்தார் தலை ஆட்டிவிட்டு சென்றுவிட்டார். நீங்கள் யாராவது நேரடியாக வந்து பார்க்க வேண்டும். பார்த்தால்தான் அங்கு எவ்வளவு மாசு ஏற்படுகிறது என்பது தெரியும். அருகில் இருக்கும் கட்டிடத்தின் கூரைகளை வந்து பாருங்கள். எவ்வளவு மாசு இருக்கிறது என்பது தெரியும். இதற்கு முன்

பேசிய தம்பி அவர்கள் ரோடு போட்டார்கள் என்று சொன்னார். ஆனால் இவர்கள் சாலை எதுவும் போடவில்லை. போட்ட சாலையை எல்லாம் இவர்கள் உடைத்துள்ளனர். 72 மீட்டரில் தண்ணீர் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி எல்லாம் கிடையாது 72 அடியில் தண்ணீர் இருந்தால் விவசாயமே செய்ய முடியாது. 30 அடியிலே தண்ணீர் வருகிறது. இரண்டு போகம் பயிர் வைக்கிறார்கள். 72 அடியில் தண்ணீர் இருந்தால் இரண்டு போகம் பயிர் வைக்க முடியாது. போர் எதுவும் கிடையாது. அனைத்தும் திறந்த வெளி கிணறு. எனவே, இதுவும் பொய்யான அறிக்கை. பசுமை அரண் என்று சொல்கிறார்கள் அதுவும் பொய். எதோ ஒரு காரணத்திற்காக திரிக்கப்பட்ட தகவலாக தெரிகிறது. அவர்கள் குவாரியை சுற்றி மரங்கள் எதுவும் வைக்கவில்லை. இனிமேலும் வைக்கப்போவதில்லை. மேலும் சுரங்கம் அமைக்கும் போது பென்ச் குழி எடுப்பு மூலம் குழி எடுக்க வேண்டும். அப்படி எடுக்கவில்லை என்றால் அருகிலிருக்கும் மண் எல்லாம் சரிந்து பக்கத்தில் நிலங்களில் வந்து விழும் விவசாயிகள் பாதிப்படைவார்கள் பின் வழக்கு தொடுத்து மூன்று வருடங்கள் கழித்து அதன் பின் தான் முடிவு வரும். அதனால் இப்பொழுதே அதனை தடுத்து நிறுத்துங்கள். எதுவும் எங்களுக்காக கேட்கவில்லை வருங்காலத்தினருக்காகவும் இங்கு உள்ள கிராமத்தினர் அனைவருக்காகவும் கேட்கிறோம். எங்கள் நான்கு பத்து பேர்களுக்காக கேட்கவில்லை அவர்களுக்கு வரும் கஷ்டம் தான் எங்களுக்கும் அதனால் தான் கேட்கிறோம். வேலைவாய்ப்பு தருகிறார்கள் என்று சொன்னார்கள் அதுவும் பொய். வெளிமாநிலங்களில் இருந்து தான் வேலைகளுக்கு வருகிறார்கள். இங்கு உள்ளவர்களுக்கு வேலை கொடுப்பதில்லை. அந்த அறிக்கையிலே அவ்வளவு தவறுகள் இருக்கிற பொழுது நாங்கள் எப்படி இதனை நம்புவது? இந்த அறிக்கையை வைத்து எப்படி மேல் நடவடிக்கை எடுக்கிறீர்கள். (மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் தங்களது கருத்துக்களை மட்டும் கூறுமாறு கேட்டுக் கொண்டார்) நீர்நிலைகள் மக்களது நிலங்களை எல்லாம் ஆக்கிரமிப்பு செய்து கொண்டே வருகிறார்கள். வெடி வைப்பதால் வீடுகள் இடிந்து விழும் நிலைமையில் இருக்கிறது. இரவில் வெடி வைப்பதால் பிள்ளைகள் எழுந்து விடுகிறார்கள். இதனால் மாசு ஏற்படுகிறது. இதனால், எங்கள் ஊரில்

உள்ள இரண்டு குளங்கள் மாசு அடைந்து இருக்கிறது, குளத்தில் உள்ள நீர்கள் மாசு அடைந்ததால் அதனை பயன்படுத்த முடியவில்லை. இது எதுவும் அவர்களது ஆய்வு அறிக்கையில் இடம்பெறவில்லை. எப்படி நாங்கள் நம்புவது? இனிமேல் வரும் புது குவாரிகளை அனுமதிக்க வேண்டாம் என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆட்சேபனை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**6. திரு. ராஜேஷ், காகனம் கிராமம்.**

இவர் கூறுகையில், இப்பொழுது நான் கூறப்போவது அனைத்தும் என்னுடைய தனிப்பட்ட கருத்துக்கள் தான். இதற்கு முன் எப்படி காகனம் என்று தெரியவில்லை. எஸ்கேடி மைன்ஸ் தான் RO குடிநீர் வசதி செய்து தந்தார்கள். அவர்களது சொந்த செலவில் 42 லட்சத்தில் கனிமவள நிதியிலிருந்து நீர் தொட்டி கட்டி தந்திருக்கிறார்கள். எங்கள் ஊரில் ஆரம்ப பள்ளி இல்லாமல் இருந்தது. இவர்கள்தான் ஒரு கோடியே இருபது லட்சத்திற்கு கனிமவள நிதியிலிருந்து ஆரம்ப பள்ளியினை கட்டி தந்தனர். கனிமவள நிதியில் இருந்துதான் சத்துணவு கூடம் கட்டி தந்தார்கள். தார் சாலை அமைத்துக் கொடுத்தார்கள் அதுவும் கனிமவள நிதியிலிருந்து தான். குளக்கரை சீரமைத்து தந்தார்கள் அதுவும் கனிமவள நிதியிலிருந்து தான். நாடக மேடை அமைத்து தந்தார்கள் அதுவும் கனிமவள நிதியிலிருந்து தான். இது அனைத்தும் எஸ்கேடி மைன்ஸ் வந்த பின் தான் கனிமவள நிதியால் செய்து தரப்பட்டது. இதற்கு முன் பஞ்சாயத்திலோ சட்டமன்ற உறுப்பினர்களோ யாரும் செய்து தரவில்லை. நான் என் கருத்தை பேசுகிறேன். என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆதரவை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**7. திருமதி. அஞ்சலை, காகனம் கிராமம்,**

இவர் கூறுகையில், நாங்கள் கிராமம் அனைவரும் கிரஷர் காரர்கள் என்ன செய்தார்கள் என்று சொல்லவா வந்திருக்கிறோம்? கிரஷர் காரர்கள் தண்ணீர் போட்டு தந்தார்கள் அப்படியெல்லாம் சொல்கிறார்கள். நாங்கள் அனைவரும் ஒத்துமையாக இங்கு வந்திருக்கிறோம். எனக்கு கையெழுத்து கூட போட தெரியாது ஆனால் நாங்கள் இவ்வளவு மக்கள் அனைவரும் வேலைகளை விட்டு

விட்டு வந்திருக்கிறோம். கிரஷர் காரர் தண்ணீர் போட்டுக் கொடுத்தார், பள்ளி அமைத்தார் என்று சொல்கிறார்கள். ஏன் அரசு இதையெல்லாம் செய்யவில்லையா? இவ்வளவு மக்கள் வேலை விட்டு வந்திருக்கிறோம் இதையெல்லாம் நீங்கள் நம்பவில்லை என்றாலும் அதனை வந்து நேரில் ஆய்வு செய்யுங்கள். கிரஷர்காரர்கள் அது செய்தார்கள் இது செய்தார்கள் என்று சொல்கிறார்கள். எதுவும் செய்யவில்லை. எங்களை சுற்றிலும் குவாரிகள் தான் இருக்கிறது. நாங்கள் எங்களது கருத்துக்களை கூறுகிறோம். என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆட்சேபனை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**<u>8. திருமதி. ஆர்த்தி. காகனம் கிராமம்.</u>**

இவர் கூறுகையில், பள்ளிகளை கட்டி தந்தது கிரஷர் காரர்கள் கிடையாது அரசுதான் கட்டி கொடுத்தது. ஆனால் அந்தப் பள்ளி குழந்தைகள் செல்லும் சாலையில் லாரிகள் செல்வதால் சாலைகள் குண்டும் குழியுமாக ஆகியிருக்கிறது. குழந்தைகள் எவ்வாறு பள்ளிக்கு செல்வார்கள்? பள்ளிக்கு செல்லும் ஒரு சிறுவன் மீது லாரி மோதி விட்டது. இதுவே வேகமாக மோதி இருந்தால் அந்த குழந்தை இப்பொழுது இருக்குமா என்று தெரியாது. இவர்கள் கிரஷர் தான் அனைத்தும் செய்கிறது என்று கூறுகிறார்கள் ஆனால் எங்கள் ஊர் அழிவதே இந்த கிரஷரால் தான். அழிவதே கிரஷரால் தான். கிரஷர் காரன் எதுவும் செய்யவில்லை. இங்கே எதுவும் கிரஷரால் செய்யப்பட்டது என்று போர்டு இல்லை. அரசினால் கட்டப்பட்ட கட்டிடம் என்று தான் இருக்கிறது. அரசு தான் எல்லாம் செய்கிறது. கிரஷரால் தான் கட்டப்பட்டது என்று எதுவும் கிடையாது. சாலை அரசு போட்டதுதான். பள்ளிக்கூடம் அரசு கட்டித் தந்தது தான். பள்ளி குழந்தைகள் செல்வதற்கு பாதுகாப்பு இல்லை. நடந்து மற்றும் சைக்கிளில் சென்ற குழந்தைகள் இப்பொழுது பெற்றோர்களால் சென்று விடப்பட்டு வருகிறார்கள். இந்த கிரஷரினால் எங்கள் நிலத்தில் பயிர் வைக்க முடியவில்லை. கேட்டால் நிலத்தினை கொடுத்து விடுங்கள் என்கிறார்கள். நாங்கள் எப்படி கொடுப்பது? விவசாயம் செய்து தான் நாங்கள் பிழைத்து வருகிறோம். இவர்களுக்கு நிலம் கொடுத்துவிட்டு அவர்கள்

கொடுக்கும் பணத்தில் ஒரு வருடம் சாப்பிட முடியும். பிறகு மீதம் உள்ள நாட்கள் நாங்கள் எப்படி பிழைப்பது. கிரஷர் காரர்களை நம்பி நாங்கள் இருக்க வேண்டுமா? நாங்கள் படித்தது அனைத்தும் பெற்றோர்களின் பணத்தில் தான் கிரஷர் காரர்களின் பணத்தில் இல்லை. என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆட்சேபனை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**9. திரு. ராமமூர்த்தி, ஓய்வு பெற்ற பொறியாளர், பொதுப்பணித்துறை, காகனம் கிராமம்,**

இவர் கூறுகையில், அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் வணக்கம். இந்த கருத்துக் கணிப்பு கூட்டம் என்பது லாப நஷ்டம் பார்க்கும் கூட்டம் அல்ல. குவாரி வருவதால் பாதிப்பு இருக்கிறதா இல்லையா என்பதுதான் இந்த கருத்துக்கணிப்பு கூட்டத்தின் நோக்கம். மற்ற எந்த கருத்துக்களும் இங்கு கூறக்கூடாது. சுற்றுச்சூழல் பாதிப்பு என்று பார்த்தால் காகனம் கிராமம் ஏழு எட்டு வருடங்களுக்கு முன்பு நன்றாக இருக்கும் தற்போது சென்று பார்த்தால் 10 நிமிடம் பயண நேரம் 20 நிமிடங்கள் ஆகும் ஏனென்றால் சாலை எல்லாம் மேடு பள்ளமாக இருக்கும். இந்த குவாரி வந்ததற்கு பிறகுதான் சுற்றுச்சூழல் மிகவும் பாதிப்படைந்து இருக்கிறது. ஏனென்றால் குவாரிக்கு பக்கத்தில் உள்ள நிலங்களை எல்லாம் விற்றுவிட்டு செல்லலாமா என்று நினைக்கிறார்கள். தண்ணீர் இல்லை. போர் போட்டும் தண்ணீர் வருவதில்லை. ஒரு செண்ட் 30,000 40,000 என்று பேரம் பேசி மனதினை மாற்றுகிறார்கள். இதனால் விவசாயம் பாதிக்கிறது. அடுத்து தண்ணீரில் மிகவும் மாசு ஏற்படுகிறது. எங்கள் ஊரில் உள்ள குளங்களை வந்து பாருங்கள். அதில் ஆடு மாடுகள் தண்ணீர் குடிக்கும். இப்பொழுது இல்லை. இப்பொழுதெல்லாம் மாடு கெட்டியாக சாணம் போட்டு பார்த்திருக்கிறீர்களா. ஏனென்றால், அது மேய்கின்ற புல்களில் உள்ள குவாரியின் தூசுகள் மற்றும் அவை குடிக்கின்ற நீரில் கலந்துள்ள தூசிகள். இதனால் மாடுகள் கால்நடைகள் மிகவும் பாதிப்படைகிறது. கருத்துக் கணிப்பு கேட்பதோடு உடனே நேரில் வந்து ஆய்வு செய்யுங்கள். நாம் இப்பொழுது திராவிட மாடல் அரசு என்று பேசிக்கொண்டு இருக்கிறோம். தற்பொழுது கூட டீசல் பெட்ரோல் வாகனங்களுக்கு பதிலாக எலக்ட்ரிக் வாகனங்களை பரிந்துரை

செய்கிறோம். ஒரு எலக்ட்ரிக் பேருந்து இரண்டு கோடி ரூபாய் இங்கு மாசுக்கட்டுப்பாடு செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற அரசு, இவ்வாறு மாசினை ஏற்படுத்துகின்ற குவாரிகளுக்கு அனுமதி தருவது எந்த விதத்தில் நியாயம். இதை செய்தார்கள் அதை செய்தார்கள் என்று சொல்கிறார்கள் கனிமவள நிதி யார் கேட்டது அரசு கேட்கிறதா? நீங்கள் செய்கின்ற தொழிலுக்கு வரி கட்டுகிறீர்கள். அரசு உங்களிடம் இனாமாகவா கேட்கிறது? நான் ஐந்தாவது வரைக்கும் எங்கள் ஊரில் உள்ள ஆரம்பப் பள்ளியில் தான் படித்தேன் அப்பொழுதெல்லாம் பள்ளிக்கூடம் இல்லையா? ஆசிரியர்கள் இல்லையா? எங்களிடம் பணம் இல்லையா? இப்பொழுது அனைத்தும் புதுசாக சொல்கிறீர்கள். லாப நஷ்டம் கணக்குகளை பார்ப்பதை தவிர்த்து சுற்றுச்சூழல் பாதிப்பு இருக்கிறதா? இல்லையா? என்பதை பாருங்கள். மேலும் இந்த குவாரிக்கு அனுமதி தரவே கூடாது என்று காகனம் கிராம மக்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆட்சேபனை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**10. திரு. சுரேஷ். காகனம் கிராமம்.**

இவர் கூறுகையில், கருத்து கணிப்பு கேட்பு கூட்டம் காகனத்தில் குவாரி தொடங்க உள்ளீர்கள் அதற்கு கூட்டத்தை வெம்பாக்கத்தில் வைக்க வேண்டும் என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? நாங்கள் அனைவரும் வேலைகளை விட்டுவிட்டு வந்து இருக்கிறோம். காகனத்தில் குவாரி தொடங்குவதற்கு வெம்பாக்கத்தில் கூட்டம் போடுவது சரியா? மக்கள் யாரும் வரமாட்டார்கள் என்று போட்டீர்களா? மக்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பதை கடினமான விஷயம். அவர்கள் இதை முடித்துவிட்டு அவர்கள் அது வேலைகளுக்கு செல்ல வேண்டும். அவர்கள் மக்கள் பேசுவதை பார்த்தால் அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. அவர்களுக்கு எப்படி பேச வேண்டும் என்று கூட தெரியவில்லை. ஆனால், அவர்களது ஆதங்கத்தினை தெரிவித்து விட்டு சென்றார்கள். குவாரி நடத்துபவர்களை எங்களுடன் வந்து வீடு கட்டிக்கொண்டு வாழ சொல்லுங்கள். நாங்கள் அப்பொழுது ஒன்றும் சொல்லவில்லை. நீங்களும் வாருங்கள் எங்கள் ஊரில் ஒரு வீட்டில் ஒரு மாதம் இரண்டு மாதம் தங்கி பாருங்கள் உங்களுக்கே

தெரியும். எங்களுக்கு தெரியும். இங்கு இருப்பவர்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் நாங்கள் அனைவரும் தெரிந்த முட்டாள்கள். நீங்கள் அனைவரும் புத்திசாலிகள். நீங்களும் உங்கள் வேலைகளை ஒரு அரசு அதிகாரிகளாக செய்ய வேண்டும் என்று வந்திருக்கிறீர்கள். உங்கள் கருத்துக்களை மட்டும் கூறுங்கள் என்று சொல்கிறீர்கள். எங்கள் வேதனையை எப்படி சொல்வது. உங்களுக்கு தண்ணீர் போட்டு கொடுத்தார்கள் RO போட்டுக் கொடுத்தார்கள் என்று சொல்கிறீர்கள். அந்த RO போடுவதற்கு தண்ணீர் எங்கிருந்து வரவேண்டும் பூமியில் இருந்து தான் வர வேண்டும் அது ஏன் உங்களுக்கு புரியவில்லை. பள்ளிக்கூடம், தார் சாலை போட்டு தந்தோம் என்கிறார்கள். அரசு போட்டு தந்த தார் சாலையை சேதப்படுத்தாமல் இருந்தால் போதும். குவாரி வரும். இங்கு இருக்கும் அனைவரும் இறப்போம். பாதிப்பேர் ஊரினை காலி செய்து கொண்டு செல்வார்கள். அவர்களிடம் பணத்தினை வாங்கி வாழ்வாதாரத்தினை உயர்த்தி கொள்வார்கள். இங்கு வருகை புரிந்திருக்கும் மக்கள் அனைவருது முன்பும் சொல்கிறேன் அவர்களது பணத்தினை வாங்கி பிழைப்பவர்கள் கண்டிப்பாக அவர்களது குழந்தைகள் தலைமுறைகள் அதன் விளைவுகளை அனுபவிக்கும். இங்கு வந்திருப்பவர்கள் பேச வேண்டாம் என்று சொல்லட்டும் நான் சென்று விடுகிறேன். வந்திருப்பவர்களுக்கு யாருக்கெல்லாம் குவாரி வர வேண்டாம் என்று ஆட்சேபனை தெரிவிக்கிறீர்கள். கேட்டுக் கொள்ளுங்கள் மேடம். இங்குள்ள அனைவரும் கல்குவாரி வேண்டாம் என்று தான் சொல்கிறார்கள். என்று கூறி இந்த குவாரி அமைவதற்கு **தனது ஆட்சேபனை தெரிவித்துக் கொண்டு** உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 22 நபர்கள் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவது குறித்த தங்களின் கருத்துகளை தெரிவித்தனர். இதில் 21 நபர்கள் குவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர்.**

| வ. எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | கிராமப் பொதுமக்கள்,<br>காகனம்,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார் |

| | | |
|---|---|---|
| 2. | திரு. வெங்கடேஷ் பாயா,<br>ஆந்திர பிரதேஷ். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 3. | திரு. சேதுபதி,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 4. | திரு. ரவி,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 5. | திருமதி. பானுபிரியா,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 6. | திரு. சந்திர சேகரர்,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 7. | திரு. கேசவன்,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 8. | திருமதி. மைதிலி,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 9. | திரு. பீர்பால் சரீத்,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 10. | திரு. சிலம்பரசன்,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 11. | திருமதி. தவமணி,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 12. | திரு. கருப்பன்,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

| | | |
|---|---|---|
| 13. | திரு. வீரமணிதாசன்,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 14. | திரு. நாகமணி,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 15. | திரு. முனுசாமி,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 16. | திரு. நெடுஞ்செழியன்,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 17. | திரு. பரமசிவம்,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 18. | திரு. முத்துக்குமரன்,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 19. | திரு. பிச்சாண்டி,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 20. | திரு. B. ராஜேஷ்,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 21. | திரு. R. ராஜேஷ்,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 22. | திரு. ராஜபுத்திரன்,<br>காகனம் காலனி,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், சார் ஆட்சியர், செய்யாறு அவர்களின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 09.07.2025).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (12 பக்கங்கள்/73 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் வாயிலாக பெறப்பட்ட 22 மனுக்கள்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவண்ணாமலை

சார் ஆட்சியர்,
(2/6) செய்யாறு.